நோயாளி தகவல் கையேடு

# மெட்ரோனிடசோல்

(METRONIDAZOLE)

# டைனிடசோல்

(TINIDAZOLE)

MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group
Adding years of healthy life

NUH National University Hospital
A member of the NUHS

Alexandra Health

EASTERN HEALTH ALLIANCE

JurongHealth

SingHealth

SINGHEALTH / PIL / T112R0

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

**மெட்ரோனிடசோல் (Metronidazole) மற்றும் டைனிடசோல் (Tinidazole) ஆகியவை, நுண்கிருமித் தொற்றுகளுக்குச் சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. மெட்ரோனிடசோல், வாய்வழி மாத்திரையாகவும் ஊசி மருந்தாகவும் கிடைக்கிறது. மேலும், நிஸ்டாட்டின் (Nystatin) என்ற மருந்துடன் சேர்க்கப்பட்டு, யோனிக்குழாயில் செருகும் மாத்திரையாகவும் (vaginal pessary) கிடைக்கிறது. டைனிடசோல், மாத்திரையாக மட்டுமே கிடைக்கிறது.**

## மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள / பயன்படுத்த வேண்டும்?

வாய்வழி மாத்திரை:

- மருந்தினால் வயிறு பாதித்தால், மருந்தை உணவுடனோ சிற்றுண்டியுடனோ எடுத்துக் கொள்ளலாம். வயிறு தொடர்ந்து பாதித்தால், மருத்துவரிடம் சோதித்துக் கொள்ளுங்கள்.
- மருந்து எடுத்த சில நாட்களில் குணமடைய ஆரம்பித்தாலும் சிகிச்சையின் முழுக் காலத்திற்கும் மருந்தைத் தொடர்ந்து எடுத்து முடியுங்கள்.
- மருந்தை இரவிலும் பகலிலும் முறையான கால இடைவெளிகளில் எடுங்கள்.

மெட்ரோனிடசோல்/நிஸ்டாட்டின் யோனிக்குழாய் மாத்திரை:

- மருந்து செலுத்தும் சாதனத்தில் (ரபபலிசாதஓர) மாத்திரையை வையுங்கள். மாத்திரையை சில வினாடிகளுக்குத் தண்ணீர் தடவி ஈரமாக்குங்கள்.
- மல்லாந்து படுத்து, கால் முட்டிகளை மடக்கி, உடலைத் தளர்த்துங்கள்.
- சாதனத்தை ஒரு கையில் பிடித்துக் கொள்ளுங்கள். பிறகு அதை மெதுவாக யோனிக்குழாயில் செருகுங்கள். வலிப்பது போல் தோன்றியதும் நிறுத்திவிடுங்கள்.
- சாதனத்தின் பிளஞ்சரை (பலஉநஙரெ) கடைசிவரை அழுத்துங்கள்.
- சாதனத்தை எடுத்துவிடுங்கள். மாத்திரை யோனிக்குழாயில் தங்கிவிட்டிருக்கும்.
- சாதனத்திலிருந்து பிளஞ்சரை அகற்றி, சாதனம், பிளஞ்சர் ஆகிய இரண்டையும் வெதுவெதுப்பான சோப்பு நீரில் நன்றாகக் கழுவுங்கள்.
- அடுத்து, சோப்பு நீங்கும்வரை அவற்றை நீரில் அலசுங்கள். பிறகு அவற்றைக் காயவைத்து, பிளஞ்சரை மீண்டும் சாதனத்தில் பொருத்துங்கள்.

## மருந்து உட்கொள்ள/ பயன்படுத்த **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை உட்கொள்ள (அல்லது பயன்படுத்த) தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள் (அல்லது பயன்படுத்துங்கள்). எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருந்து மருந்து உட்கொள்ளுங்கள் (அல்லது பயன்படுத்துங்கள்). முதலில் பயன்படுத்தத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ பயன்படுத்தாதீர்கள். மருந்தைப் பலமுறை எடுக்கத் தவறியிருந்தால், என்ன செய்ய வேண்டும் என்பதை மருத்துவரிடம் கேளுங்கள்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள

## இந்த மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை?

இம்மருந்துகள் குமட்டல், வயிற்றுப்போக்கு, பசியின்மை, வாந்தி, வாய் உலர்தல், வாயில் ஓர் இனிமையற்ற உலோகச் சுவை மற்றும் நாக்கில் சுவை உணர்வு மாறுதல் போன்றவற்றை ஏற்படுத்தலாம். வாய் உலர்வதைத் தற்காலிகமாகப் போக்குவதற்கு, சீனி சேர்க்காத மிட்டாய் அல்லது ஐஸ் கட்டிகள் சப்புங்கள்.

இந்த மருந்துகளோடு மது அருந்தினால் வயிற்று வலி, குமட்டல், வாந்தி அல்லது முகம் திடீரென்று சிவத்தல் ஏற்படலாம்.

இந்த மருந்துகள் தலைக் கிறுகிறுப்பு அல்லது தலைச் சுற்றலை ஏற்படுத்தலாம். இந்தப் பாதிப்புகள் இருந்தால், வாகனம் ஓட்டாதீர்கள் மற்றும் இயந்திரங்கள் இயக்காதீர்கள்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

வாய்வழி மாத்திரை:

நோயின் அறிகுறிகள் சில நாட்களில் நீங்கவில்லை என்றால், அல்லது அவை மோசமானால், மருத்துவரிடம் கூறுங்கள்.

இந்த மருந்துகளை எடுக்கும் காலத்திலும், மருந்தை நிறுத்திய பிறகு அடுத்த 3 நாட்களுக்கும் மது அருந்தாதீர்கள்.

இந்த மருந்துகளை இரத்தஉறைவு-எதிர்ப்பு மருந்துகளோடு உட்கொண்டால் இரத்தப்போக்கு ஏற்படும் அபாயம் அதிகரிக்கலாம். எனவே, நீங்கள் இரத்தஉறைவு-எதிர்ப்பு மருந்துகளை (வார்.ˆ.பரின் போன்ற இரத்த அடர்த்திக் குறைப்பு மருந்துகளை) உட்கொண்டு வந்தால் அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

யோனிக்குழாய் மாத்திரை (Vaginal Pessary):

மருந்து உங்களின் உள்ளாடையில் ஒட்டாமலிருக்க மாதவிடாய்க்கால கழிவாடை (ஸாநிதாரய நாபகிநஸ) அணிந்து கொள்ளுங்கள். டாம்போன்கள் (தாமபஓநஸ) மருந்தை உறிஞ்சிவிடும் என்பதால் அவற்றைப் பயன்படுத்தாதீர்கள். செயற்கைத் துணியிலான உள்ளாடைக்குப் பதிலாக பருத்தி உள்ளாடைகள் அணியுங்கள்.

வேறு மருந்துகள், மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள் அல்லது வைட்டமின்களை நீங்கள் உட்கொண்டு வந்தால், அதை மருத்துவர் மற்றும் மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.

வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை இருந்தால், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டால் அதைக் கண்டிப்பாக மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது பாதிக்கும்: முகம்/கண்கள்/உதடுகள் வீங்கும், மூச்சு விடச் சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.

நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வந்தால், கர்ப்பமாக இருந்தால், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருந்தால், மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்துகளை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.